මහජන බැංකුව | மக்கள் வங்கி

PEOPLE'S BANK

# கேள்விப்பத்திர அறிவித்தல்.

## <u>பயன்படுத்தப்பட்ட பொருட்களை விற்பனை செய்தல்.</u>

மக்கள் வங்கியினால் பயன்படுத்தப்பட்ட மீண்டும் பயன்பாட்டுக்கு எடுத்துக்கொள்ளக் கூடிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை (கழிக்கப்பட்ட பொருட்கள் உட்பட) விற்பனை செய்வதற்காக முத்திரையிடப்பட்ட விலை மனுக்கள் கோரப்படுகின்றது.

**ATM இயந்திரங்கள், பாதுகாப்பு பெட்டகம், கழிக்கப்பட்ட பிரின்டர்ஸ், UPS, மொனிட்டர் மற்றும் கணினி விசைப் பலகைகள், வளிச்சீராக்கி இயந்திரங்கள், அகற்றப்பட்ட இரும்பு, பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்ட டயர்கள், கோப்பு கபினெட்கள், மின்சார விசிறிகள்**

| கேள்விப்பத்திர இலக்கம் | கேள்விப்பத்திர விண்ணப்பம் (மீளச் செலுத்தப்படாத) | கேள்விப்பத்திர வைப்புத் தொகை (மீளச் செலுத்தும்) |
|---|---|---|
| P/72/2025 | ரூ. 5,000/- (ஒரு விண்ணப்பத்திற்காக) | ரூ. 25,000/- |

இப் பொருட்களை மக்கள் வங்கியின், கொழும்பு 02, கியூ வீதி, இலக்கம்: 30/101, வழங்கல் திணைக்கள வளாகத்தில் 2025.06.04ஆம் திகதி முதல் 2025.06.24ஆம் திகதி வரை (சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை மற்றும் வங்கி விடுமுறை தினங்களைத் தவிர்த்து) மு.ப. 9.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை பரீட்சித்துப் பார்க்க முடியும்.

1. கேள்விப்பத்திர விண்ணப்பங்களை 2025.06.04ஆம் திகதி முதல் 2025.06.24ஆம் திகதி வரை வாரத்தில் வேலை நாட்களில் முற்பகல் 9.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை இலக்கம்: 30/101, கியூ வீதி, கொழும்பு 02 என்ற முகவரியில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் வழங்கல் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன், ஒரு கேள்விப்பத்திர விண்ணப்பத்திற்காக ரூ.5,000/- மீளச் செலுத்தப்படாத கேள்விப்பத்திர வைப்புத் தொகையொன்றைச் செலுத்த வேண்டும். கேள்விப்பத்திர விண்ணப்பத்தைப் பெற்றுக்கொள்ளுவதற்காக குறித்த நிறுவனத்தின் விண்ணப்ப கடிதமொன்றையும் இத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

2. ஒவ்வொரு பொருளுக்கும் வெவ்வேறாக கேள்விப்பத்திர விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்களுக்காக விலை மனுக்களைக் கோரல் 2025.06.25ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவடைவதோடு, அன்றைய தினமே கேள்விப்பத்திரம் திறக்கப்படும். பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் திறக்கப்படாமலே மீள ஒப்படைக்கப்படும். கேள்விப்பத்திர விண்ணப்பங்களைத் திறக்கும் சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரர் அல்லது பிரதிநிதி ஒருவர் கலந்துகொள்ள முடியும்.

4. கேள்வி (டென்டர்) வழங்கப்பட்டு 14 வேலை நாட்களுக்குள் குறித்த பணத் தொகையைச் செலுத்தி பொருட்களை அகற்றிக்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால் வங்கி தனது தற்றுணிபின் பிரகாரம் அடுத்தகட்ட நடவடிக்கையை மேற்கொள்ள இடமுண்டு.

5. கேள்வி (டென்டர்) சம்பந்தப்பட்ட ஏற்புடையதான நிபந்தனைகளும் நியதிகளும் கேள்விப்பத்திர விண்ணபத்துடன் வழங்கப்படும்.

6. குறித்த கேள்வியை (டென்டர்) வழங்குவதற்கு அல்லது வழங்காமல் இருப்பதற்கு மக்கள் வங்கிக்கு பூரண உரிமை உண்டு.

பின்வரும் தொலைபேசி இலக்கங்கள் ஊடாக பிரதம முகாமையாளர் (வழங்கல்) அவர்களுடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**பிரதம முகாமையாளர் (வழங்கல்)**
**மக்கள் வங்கி,**
**வழங்கல் திணைக்களம்,**
**30/101, கியு வீதி, கொழும்பு 02.**

**தொலைபேசி இலக்கம் - 011-2307326, 2439577, 2439578**
**தொலைநகல் இலக்கம் - 2439576**
**இணையத்தளம் - www.peoplesbank.lk**
**மின்னஞ்சல் - supplies@peoplesbank.lk**